செ.வெ.எண். 306 நாள்.04.07.2017

காஞ்சிபுரம் பெருநகராட்சி

வாரம் ஒரு முறை பிளாஸ்டிக் சேகரித்தல்

- 01/07/2017 முதல் **பிரதி வாரம் புதன்கிழமையன்று** பிளாஸ்டிக் மற்றும் மக்காத குப்பைகள் நகராட்சியால் சேகரிக்கப்படவுள்ளது.

- காஞ்சிபுரம் பெருநகராட்சி எல்லைக்குட்பட்ட தொழிற்சாலைகள், குடியிருப்புகள் மற்றும் வணிகநிறுவனங்களில் **பிரதி வாரம் புதன் கிழமையன்று** நேரடியாக நகராட்சி பணியாளர்கள் தங்களின் இருப்பிடத்திற்கே வந்து பிளாஸ்டிக் மற்றும் மக்காத குப்பைகளை பெற்றுச்செல்வார்கள்.

- எனவே பொதுமக்கள் அனைவரும் பிளாஸ்டிக் மற்றும் மக்காத குப்பைகளை **புதன்கிழமையன்று** மட்டும் நகராட்சி பணியாளர்களிடம் நேரடியாக கொடுக்கப்படவேண்டுமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

- மேலும் வாரத்தில் மற்ற நாட்களில் பிளாஸ்டிக் மற்றும் மக்காத குப்பைகளைதெருக்களிலோ அல்லது பொது இடங்களிலோ குப்பைகளை கொட்டவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

- நகராட்சி பணியாளர்கள் **பிரதி வாரம்** புதன்கிழமையன்று பெற்றுக்கொள்ளும்வரை தங்களின் இருப்பிடத்திலேயே பிளாஸ்டிக் மற்றும் மக்காத குப்பைகளை சேகரித்து வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- மக்கும் குப்பைகளை நகராட்சி வைத்துள்ள குப்பைத்தொட்டிகளில் மட்டுமே தினசரி கொட்டவேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.